# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், அழகப்பா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருக்கான தேடுதல் குழுவின் உறுப்பினராக பாட்னா உயர்நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி மாண்புமிகு நீதியரசர் எல். நரசிம்ம ரெட்டி அவர்களை நியமனம் செய்துள்ளார்கள். ஆளுநரின் பிரதிநிதியான நீதியரசர் திரு. எல். நரசிம்மரெட்டி அவர்கள் தேர்வுக் குழுவின் தலைவராக இருப்பார். தற்போதுள்ள துணை வேந்தரின் பணிக்காலம் 4.6.2018 அன்று முடிவடைகிறது.

தேர்வுக் குழுவின் மற்ற உறுப்பினர்களாக தமிழக அரசின் பிரதிநிதி திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப. (ஓய்வு), பல்கலைக்கழக பேரவை பிரதிநிதி பேராசிரியர் திரு. கே. வேணுகோபால் ராவ், நிர்வாகத் துறை தலைவர் மற்றும் முதல்வர், கல்லூரி வளர்ச்சிக் குழு, கிருஷ்ணதேவராய பல்கலைக்கழகம், அனந்தபூர், பல்கலைக்கழக நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர் திரு. கே. செல்லப்பன், ஓய்வு பெற்ற பேராசிரியர், ஆங்கிலத் துறை, பாரதி தாசன் பல்கலைக்கழகம் மற்றும் டாக்டர் எஸ். ராஜேந்திரன், பேராசிரியர், பொருளாதாரத் துறை, காந்திகிராம நிறுவனம் ஆகியோர் இருப்பர்.

தேர்வுக் குழு காலியிடத்திற்கான அறிவிக்கையை செய்தித்தாள்களிலும் மற்றும் பல்கலைக்கழக வலைதளத்திலும் வெளியிட்டு அதிகப்படியான தேர்வர்கள் விண்ணப்பிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உரிய படிவத்தில் பெறப்பட்ட விண்ணப்பங்களை கவனமாக பரிசீலனை செய்து, அனைத்து தகுதிகளையும் நேரடியாக ஆராய்ந்து பத்து நபர்களுக்கு மிகாத வகையில் தேர்வுப் பட்டியல் தயார் செய்ய வேண்டும். அதன் பிறகு தேடுதல்குழு மூன்று பேர் கொண்ட பட்டியலை தகுதிக்குரிய விளக்கங்களுடன் ஆளுநரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.